பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 26** **நாள்: 01.02.2019**

# அரும்பாக்கம் மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் அருகில் உள்ள வேலங்காடு மற்றும் நுங்கம்பாக்கம் மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–100, அரும்பாக்கத்தில் அமைந்துள்ள இந்து மயானபூமியில் இறந்தவர் உடலை எரிக்கும் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. அதனை பராமரிக்கும் பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதால், 02.02.2019 முதல் 08.02.2019 வரை மேற்கண்ட மயான பூமி இயங்காது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அண்ணாநகர், நியூ ஆவடி சாலையில் அமைந்துள்ள வேலங்காடு இந்து மயானபூமி மற்றும் நுங்கம்பாக்கம் இந்து மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**